1992 மார்ச் 24] [திரு. சு. முத்துசாமி]

அளவிற்குத்தான் அரசாங்கம் செய்யமுடியும். எனினும் இதையும் நாம் சீர்படுத்தி முறையாக வேகப்படுத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை வேண்டுமானால் மேற்கொள்ளலாம்,

(ஆ) சீர்காழி ஒன்றியம் தென்னாம்பட்டினம் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் குடிநீர் உப்பாக உள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. து. மூர்த்தி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''சீர்காழி ஊராட்சி ஒன்றியம், தென்னாம்பட்டினம் ஊராட்சியின் உள்ள கிராமங்கள் அனைத்திலும் குடி தண்ணீர் உப்பு நீராக உள்ளது குறித்து'' மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் விவரக் அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

சீர்காழி ஒன்றியம், தென்னாம்பட்டினம் ஊராட்சியில் 7 குடியிருப்புகள் உள்ளன. அவைகளாவன (1) தென்னாம்பட்டினம், (2) மாதாம்பட்டினம், (3) கீழ மூவாக்கரை, (4) மேல மூவாக்கரை, (5) கீழக்கரை, (6) கோனயாம் பட்டினம், (7) அன்னப்பன் பேட்டை. இக்குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு 1974-75ஆம் ஆண்டு ஒரு மின்னிறைப்பான் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்திற்கான நீராதாரம் உப்பு நீர் ஊடுருவலால் பாழ்பட்டு (பழுதடைந்து) விட்டது, 1985–86இல் மேற்கண்ட குடிநீர்த் திட்டத்தில், அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றில் உப்பு நீர் வந்ததன் காரணமாக திட்டம் கைவிடப்பட்டது. எனவே, கடற்கரையை ஒட்டியுள்ள கடலோர குடியிருப்புகளுக்கு நல்ல குடிநீர் வழங்குவதற்காக, சீர்காழி மற்றும் செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 138 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வுபணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதியிலுள்ள சீர்காழி ஊராட்சி ஒன்றியம் தென்னாம்பட்டினம் ஊராட்சியில் உள்ள கிராமங்கள் அனைத்திலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி கிடையாது. இந்த கிராமங்கள் அனைத்தும் கடற்கரையையொட்டிய கிரா

மங்கள். இங்கே சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவ மக்கள் வாழ்ந்து வருவதால் இந்தப் பகுதியிலுள்ள அனைத்து கிராமங்களிலும் குடிநீர் வசதிக்காக கைப் பம்புகள் அமைக்க பட்டுள்ளன. அந்தப் பகுதி கடற்கரையை ஒட்டிய பகுதியாக இருப்பதாலும், கடல் உப்புநீர் அந்தப் பகுதியை ஆக்கிரமித்து உள்ளதாலும் குடிநீருக்காக வைக்கப்பட்டுள்ள கைப் பம்புகளில் குடிப்பதற்காக நீர் அடித்தால் கடல்நீர் கொட்டுகின்ற அவல நிலை இன்றைக்கு இருந்து வருகிறது. குடிநீருக்காக மக்கள் வெகு தொலைவில் அலைகின்ற கோலம் இருக்கிறது. இன்னும் பல இடங்களில் ஊற்றுகளைத் தோண்டி அதில் ஊறுகின்ற நீரை தோண்டிகளில் சிறுக சிறுக சேமித்து அந்த நீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்துகின்றனர். இப்படி வெகு தொலைவிற்கு சென்று ஊற்றுகளிலிருந்து குடிநீர் சேமிப்பதால் கால விரயம் ஏற்படுவதால் அந்தப் பகுதியிலுள்ள பெண்கள் வேலைக்குச் செல்லமுடியாமல் பெரிய பொருளாதாரக் குழப்பம் ஏற்படுகிறது. இப்படி சிறுக சிறுக சேமிக்கப்பட்ட குடிநீர் அந்தக் குடும்பத்திலுள்ள நபர்களுக்கே பற்றாத சூழ்நிலையில் வீட்டுக்கு விருந்தாளிகள் வந்து விட்டால் இன்னும் மோசமான அவல நிலை, சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. இதை விட....

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. து. மூர்த்தி, கேள்வி கேட்க வேண்டும்.

திரு. து. மூர்த்தி: மேற்கண்ட காரணங்களால் இந்தப் பகுதி மக்கள் வேறு இடங்களுக்குக் குடி பெயர்ந்து செல்கின்ற அபாயகரமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. விவர அறிக்கையில் கூட்டுக் குடிநீர் திட்டம் ஒன்று அமைக்க ஆய்வில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். அந்தத் திட்டம் வெகு விரைவில் அமைக்கப்பட்டால், அந்தப் பகுதியில் இருக்கின்ற அத்தனை மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதால் வெகு விரைவில் இதனை அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி ஒன்றியத்தின் சார்பாக 28 கை இறைப்பான்களும், மேல்நிலை நீர்த் தொட்டிகளும் செயல்படுகின்றன. அவற்றில் வருகிற தண்ணீர் உப்பு நீராக இருக்கிற காரணத்தினாலே இதற்கு மாற்று வழியாக சீர்காழி, செம்பனார்கோயில் மற்றும் கடலோரக் கிராமங்களுக்காக கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான நீர் ஆதாரம் கொள்ளிடம் ஆற்றிலிருந்து பெறப்படும். இந்த ஆய்வுப் பணிகள் வருகிற செப்டம்பர் 1992-க்குள் முடிக்கப்பெற்ற பின்பு, இதை செயல்படுத்துவதற்குரிய ஆணைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.